Dhinathdhalam@gmail.com
www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**
தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125

**செய்தியாளர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை
☎ 94440 82959

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 84 | ஞாயிற்றுக்கிழமை Sunday | 25.01.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# சத்துணவு, அங்கன்வாடி ஊழியர்களுக்கு ஓய்வூதியம் உயர்வு



## முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை: சத்துணவு அமைப்பாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், கிராம ஊராட்சி செயலாளர்களுக்கான ஓய்வூதியம் 2,000 ரூபாயிலிருந்து 3,400 ரூபாயாகவும், பணி நிறைவின் போது அவர்களுக்கு வழங்கப்படும் ஒட்டுமொத்த் தொகை 1 லட்சம் ரூபாயிலிருந்து 2 லட்சம் ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்படும் என்று சட்டப்பேரவையில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று அறிவித்தார்.

தமிழக சட்டப்பேரவை கடந்த ஜன.20-ல் தொடங்கியது. கூட்டத்தொடரின் கடைசி நாளான இன்று ஆளுநர் உரைக்கு பதிலுரை அளித்த முதல்வர் ஸ்டாலின் பல்வேறு முக்கிய அறிவிப்புகளை வெளியிட்டார். அதில் சத்துணவு அமைப்பாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், கிராம ஊராட்சி செயலாளர்களுக்கான ஓய்வூதியம் உயர்வு கவனம் பெறுகிறது. இது தொடர்பாக சட்டப்பேரவையில் முதல்வர் ஸ்டாலின் கூறியது: "இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையிலே முதல்முறையாக 2008-ல் சத்துணவு ஊழியர்களுக்கு காலமுறை ஊதியம் திமுக அரசால் வழங்கப்பட்டது.

அந்த சாதனையின் தொடர்ச்சியாக, சத்துணவு அமைப்பாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், கிராம ஊராட்சி செயலாளர்களுக்கான ஓய்வூதியம் 2,000 ரூபாயிலிருந்து 3,400 ரூபாயாகவும், பணி நிறைவின் போது அவர்களுக்கு வழங்கப்படும் ஒட்டுமொத்த் தொகை 1 லட்சம் ரூபாயிலிருந்து 2 லட்சம் ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்படும்.

குறு அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் சத்துணவு சமையல் உதவியாளர்களுக்கான சிறப்பு ஓய்வூதியம் 2,000 ரூபாயிலிருந்து 3,200 ரூபாயாகவும், பணி நிறைவின் போது அவர்களுக்கு வழங்கப்படும் ஒட்டுமொத்த் தொகை 50,000 ரூபாயிலிருந்து 1 லட்சம் ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்படும்.

சிறப்பு ஓய்வூதியம் பெற்று வரும் சத்துணவு அமைப்பாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், கிராம ஊராட்சி செயலாளர்கள் இறந்து விட்டால் அவர்களின் குடும்பத்துக்கு குடும்ப ஓய்வூதியமாக 1,200 ரூபாயும், மேலும் சிறப்பு ஓய்வூதியம் பெற்று வரும் குறு அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் சமையல் உதவியாளர்கள் உள்ளிட்ட இதர சிறப்பு காலமுறை ஊதியப் பணியாளர்கள் இறந்து விட்டால் அவர்களின் குடும்பத்துக்கு குடும்ப ஓய்வூதியமாக 1,000 ரூபாயும் வழங்கப்படும்.

சிறப்பு ஓய்வூதியம் பெற்று வரும் மேற்குறிய பணியாளர்கள் உயிரிழக்க நேரிட்டால் இறந்த பணியாளர்களின் இறுதிச் சடங்கு செலவினங்களுக்காக 20,000 ரூபாய் வழங்கப்படும் இந்த அறிவிப்புகள் மூலம் தற்போதுள்ள சிறப்பு காலமுறை ஊதியப் பணியிடங்களில் பணிபுரிந்து வரும் பணியாளர்களும் இத்தகைய பணியிடங்களில் பணிபுரிந்துஓய்வுபெற்ற ஒன்றரைலட்சத்திற்கும் மேற்பட்ட ஓய்வூதிய தாரர்களும், அவங்களுடைய குடும்ப உறுப்பினர்களும் பயனடைவார்கள் என்று முதல்வர் ஸ்டாலின் கூறினார்.

1 லட்சம் வீடுகள்: மேலும் அவர் வெளியிட்ட அறிவிப்பில், 'கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் ஏற்கெனவே 2 லட்சம் வீடுகள் உருவாகி இருக்கக்கூடிய நிலையில், புதிதாக 3,500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1 லட்சம் வீடுகள் கட்டப்படும் என்ற அறிவிப்பையும் முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டார்.

2,200 கிலோமீட்டர் கிராமச் சாலைகள் மேம்படுத்தப்படும்: 'முதல்வரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்' கீழ், 8,911 கோடி ரூபாய் மதிப்பில 20,484 கிலோமீட்டர் நீளம் உள்ள கிராமச் சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளது. மேலும் புதிதாக 1,088 கோடி ரூபாய் மதிப்பீட்டுல சுமார் 2,200 கிலோமீட்டர் கிராமச் சாலைகள் மேம்படுத்தப்படும் என்று முதல்வர் அறிவித்தார்.

கூடுதலாக 1.8 லட்சம் பேருக்கு மாதாந்திர ஓய்வூதியம்: 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டத்தின் கீழ் அளித்த விண்ணப்பங்கள் உள்ளிட்ட கோரிக்கைகளின் அடிப்படையிலே, கூடுதலாக 1 லட்சத்து 80 ஆயிரம் நபர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியம் வழங்கப்படும். இதற்கான விழா வரும் 4.2.2026 அன்று தமிழ்நாடு முழுவதும் நடைபெறும் என்று அறிவித்தார்.

முதல்வரின் பதிலுரை, பல்வேறு அறிவிப்புகளைத்தொடர்ந்து தமிழக சட்டப்பேரவை தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டது.

# காவல்துறை வாகனம் மீது மர்ம நபர்கள் நாட்டு வெடிகுண்டு வீச்சு; எடப்பாடி பழனிசாமி கண்டனம்



சென்னை:

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு பாதிக்கப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டி வருகிறார்கள். கொலை, கொள்ளை, கட்டப்பஞ்சாயத்து, பாலியல் வன்முறை, போதை பொருள் புழக்கம், அடிதடி என்று குற்ற சம்பவங்கள் அதிகரிப்பதாக அதிமுக, பாஜக உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டி வருகிறார்கள். பெரம்பலூர் சுங்க சாவடி அருகே காவல்துறை வாகனத்தின் மீது மர்ம நபர்கள் நாட்டு வெடி குண்டு வீசி தாக்கிய சம்பவம் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த விவகாரத்தில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலினை எடப்பாடி பழனிசாமி கண்டித்துள்ளார்.

பெரம்பலூர்மாவட்டம், சென்னை - திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் உள்ள சுங்கச் சாவடி அருகே இன்று காலை ஒரு காவல்துறை வாகனம் சென்று கொண்டிருந்தது. அப்போது அங்கு வந்த மர்மநபர்கள்போலீஸ் வாகனம் மீது நாட்டு வெடிகுண்டு வீசினார்கள். இதில் 4 போலீசார் காயமடைந்துள்ளனர். இது அந்தப் பகுதியில் அதிர்ச்சியையும், பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

சம்பவ இடத்தில் மத்திய மண்டல ஐஜி பாலகிருஷ்ணன் ஆய்வு செய்தார். அப்போது செய்தியாளர்களைச் சந்தித்த அவர், "வெள்ளைகாளிஎன்கிற ரவுடியை குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டது. காவலர் காவலர்கள் பாதுகாப்பில் அழைத்து வந்தவர்களை பின் தொடர்ந்து வந்து மர்ம நபர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர். அந்த மர்ம கும்பலை பிடிக்க 5 தனிப்படைகள் அமைத்து தீவிரமாக தேடி வருகிறோம். விரைவில் பிடித்துவிடுவோம்" என்றார்.

இதுகுறித்து அதிமுகபொதுச்செயலாளரும், எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி தன்னுடைய எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "தமிழக சட்டமன்றத்தில் இன்று பொம்மை முதலமைச்சர் ஸ்டாலின் தன் முதுகை தானே தட்டிக்கொண்டு பெருமை பேசி வந்த நேரத்தில், திருச்சி சென்னை நெடுஞ்சாலையில் அமைந்துள்ள பெரம்பலூர் சுங்கச்சாவடி அருகே காவல்துறைவாகனம் ஒன்றின் மீது மர்ம நபர்கள் சிலர் நாட்டு வெடிகுண்டுகளை வீசியிருக்கிறார்கள்.

பல்வேறு வழக்குகளில் சம்பந்தப்பட்ட மதுரையைச் சார்ந்த வெள்ளைகாளி என்ற ரவுடியை காவலர்கள் விசாரணைக்காக அழைத்து செல்லும் போது இந்த கொடூர சம்பவம் நடந்துள்ளது. இந்த வெடிகுண்டு வீச்சில் ரவுடியின் பாதுகாப்பிற்காக வந்த 4 காவலர்கள் படுகாயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வருகின்றன.



குற்றச் செயல்களில் ஈடுபடும் காவல்துறையை பார்த்தோ, இந்த அரசை பார்த்தோ கிஞ்சித்தும் அச்சமில்லை என்ற நிலைதான் நிலவுகிறது. சட்டம் ஒழுங்கைசந்திசிரிக்க வைக்கும் நிலையில், ஆட்சி சக்கரத்தை ஏனோதானோ என்று சுழற்றி வரும் முதலமைச்சர் ஸ்டாலின் இந்த சம்பவத்திற்கு யார்மீது பழிபோடப் போகிறார் என்று தெரியவில்லை. காவல்துறையை தன்னிச்சையாக செயல்பட அனுமதிக்காத முதலமைச்சர் ஸ்டாலினை வன்மையாக கண்டிக்கிறேன்" என்று கூறியுள்ளார்.

# தமிழகத்தில் 9 மாவட்டங்களுக்கு மஞ்சள் எச்சரிக்கை!



தமிழகம் – இலங்கை கடலோரப்பகுதிகளுக்கு அப்பால் உள்ள தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளின் மேல் கிழக்குதிசைவளிமண்டல அலை நிலவுகிறது.

எங்கெல்லாம் கனமழை?

ஜன. 25 வடதமிழக கடலோர மாவட்டங்களில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், ஏனைய தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், புதுவைமற்றும்காரைக்கால்பகுதிகளிலும் கனமழை பெய்யக்கூடும்.

ஜன. 26ல்(நாளை) செங்கல்பட்டு, திருவண்ணாமலை, சேலம், நாமக்கல், கள்ளக்குறிச்சி, விழுப்புரம், கடலூர், தஞ்சாவூர், ராமநாதபுரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும் மற்றும் புதுவையிலும் கனமழை பெய்யக்கூடும்.

குறைந்தபட்ச வெப்பநிலை


ஜன. 25 முதல் 27 வரை தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் குறைந்தபட்ச வெப்பநிலையில் குறிப்பிடத்தக்க மாற்றதிற்கான வாய்ப்பு குறைவு. எனினும் ஓரிரு இடங்களில் சற்று உயரக்கூடும். குறைந்தபட்ச வெப்பநிலை ஓரிரு இடங்களில் 2–3 டிகிரி செல்சியஸ் இயல்பை விட அதிகமாக இருக்கக்கூடும்.

மீனவர்களுக்கான எச்சரிக்கை

ஜன. 25ல் வடதமிழக கடலோரப்பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 60 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.

ஜன. 25ல் தமிழக கடலோரப்பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 60 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும். இந்தப் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாமென்று அறிவுறுத்தப்படுகிறார்கள்.

# ஜெட் வேகத்தில் உயரும் தங்கம், வெள்ளி விலை



சென்னையில் வெள்ளி கிலோ (சனிக்கிழமை) ரூ. 10,000 உயர்ந்துள்ளது.

தங்கம் விலை வரலாறு காணாத அளவுக்கு மிக வேகமாகஉயர்ந்துவருகிறது. சவரன் ஒருலட்சத்தைத் தாண்டி அசுர வேகத்தில் உயர்ந்து வரும் நிலையில் நேற்று(வெள்ளிக்கிழமை) காலையில் ரூ. 3,600 உயர்ந்த நிலையில் மாலையில் ரூ. 500 குறைந்தது.

இதன்தொடர்ச்சியாகஇன்று(சனிக்கிழமை)காலை சவரனுக்கு ரூ. 560 அதிகரித்து ரூ. 1,16,960 –க்கு விற்பனை செய்யப்படுகிறது. ஒரு கிராம் தங்கம் ரூ. 70 உயர்ந்து ரூ. 14,620–க்கு விற்பனையாகிறது. தங்கம் கடந்த சில தினங்களாக புதிய உச்சத்தில் இருந்து வருகிறது.

அதேபோல வெள்ளி விலையும் வேகமாக அதிகரித்து வருகிறது. வெள்ளி கிராமுக்கு ரூ. 10 உயர்ந்து ரூ. 355–க்கும் ஒரு கிலோ வெள்ளி ரூ. 10,000 உயர்ந்துரூ.3,55,000–க்கும்விற்பனைசெய்யப்படுகிறது.

தங்கம், வெள்ளி விலை இதுவரை இல்லாத அளவுக்கு உயர்ந்து வருவது மக்கள் மத்தியில் அதிர்ச்சியையும்கலக்கத்தையும்ஏற்படுத்தியுள்ளது.

செய்திகள்
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில்
இணையுங்கள்
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

## கோவையில் டிஜே அகாடமி ஆஃப் டிசைன் கல்லூரியின் புதிய லோகோ அறிமுகவிழா நிகழ்ச்சி நடைபெற்றது

### இந்திய அனிமேஷன் திரைப்பட நிபுணர் சுரேஷ் ஏரியாட் இணைந்து அறிமுகம் செய்து வைத்தார்




டிஜே அகாடமி ஆஃப் டிசைன் கல்லூரி, சி.ஐ.ஐ.-யங்இந்தியன்ஸ் சார்பில் "லெட்ஸ் டாக் இன் கோவை" எனும் தனித்துவமான கலந்துரையாடல் நிகழ்ச்சியினை கோவையில்துவக்கியது.

டிஜே அகாடமி ஆஃப் டிசைன் கல்லூரிசார்பில் படைப்பு துறை, கலை, மேடை நாடகம், திரைப்படம், சமூக அறிவியல், ஆராய்ச்சி மற்றும் தொழில்துறை என பல்வேறு துறைகளை சேர்ந்த நிபுணர்கள், சிந்தனையாளர்கள், முன்னோடிகளை ஒரே மேடையில் அணிதிரட்டி, அவர்களை கொண்டு கோவை பற்றிய தொடர் கலந்துரையாடல் நிகழ்ச்சியை "லெட்ஸ் டாக் இன் கோவை" என நடத்தியது. கோவை பாப்பநாயக்கன்பாளையத்தில் உள்ள, மணி மேல்நிலை பள்ளியில் நடைபெற்றஇந்தநிகழ்ச்சியின் வாயிலாக, எல்.எம்.டபிள்யு. லிமிடெட் நிறுவனத்தின் தலைவரும், நிர்வாக இயக்குனருமான சஞ்ஜய் ஜெயவர்த்தனவேலு, ஜி.கே.டி. சேரிட்டி டிரஸ்ட் அறங்காவலர் லலிதா தேவி சஞ்ஜய் ஜெயவர்த்தனவேலு, டிஜே அகாடமி ஆஃப் டிசைன் கல்லூரியின் டீன் வைத்தியநாதன் ராமசுவாமி, கல்லூரியின் நிர்வாக குழு உறுப்பினர் மைக்கல், யங்இந்தியன்ஸ்கோவை கிளையின் தலைவர் நீல்கிக்கானி,உள்ளிட்டபலர் கலந்து கொண்டனர். தொடர்ந்து

'உள்ளூர் கதைகளும், உலக அளவிலான விவாதங்களும்' என தலைப்பிடப்பட்ட முதல் சொற்பொழிவு நடைபெற்றது. இதில் இந்திய அனிமேஷன் துறையில் ஒரு முன்னோடியாக திகழும் சுரேஷ் ஏரியாட் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். இதன் பின்னர் டிஜே அகாடமி ஆஃப் டிசைன் கல்லூரியின் புதிய லோகோ வெளியிடப்பட்டது. இத்துடன் சுரேஷ் அவர்களின் சிறந்த திரைப்படைப்புகள் சில காட்சிப்படுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.






ஈரோடு மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் A.சுஜாதா அவர்கள் தலைமையில் நேற்று (24.01.2026) வாராந்திர கவாத்து பயிற்சி நடைபெற்றது, இதில் வருகிற 77 ஆவது குடியரசு தின விழாவை முன்னிட்டு காவலர்கள், ஊர்க்காவல் படையினர் மற்றும் தேசிய மாணவர் படை மாணவர்களின் அணி வகுப்பு மரியாதையை ஏற்று மேற்பார்வையிட்டார்.



சேலம் கருப்பூர் அரசு என்ஜினீயரிங் கல்லூரியில் குடியரசு தினத்தை முன்னிட்டு, கலை மன்றம் சார்பில் அம்பேத்கர் உருவப்படத்தை கைரேகை மூலம் உருவாக்கும் நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. கல்லூரி முதல்வர் கீதா முதல் நபராக கைரேகை வைத்து சாதனை முயற்சியைத் தொடங்கி வைத்தார். தொடர்ந்து பேராசிரியர்கள், நிர்வாக அலுவலர்கள் மற்றும் 500க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் பல வண்ணங்களைத் தொட்டு 8 லட்சத்து 16 ஆயிரம் கைரேகைகளை பதிவு செய்தனர். 70 அடி நீளம், 50 அடி அகலத்தில் 3 ஆயிரத்து 500 சதுர அடி துணியில் இந்த சாதனை முயற்சி மேற்கொள்ளப்பட்டது

## வண்டலூரில் காரில் கடத்தப்பட்ட இளைஞரை 40 கி.மீ., தூரம் விரட்டி சென்று போலீசார், ஏழு பேரை கைது செய்தனர்

### நள்ளிரவில், சினிமாவை மிஞ்சும் வகையில் இந்த ருசிகர சம்பவம் நடந்துள்ளது.

தாம்பரம் அடுத்த சேலையூர், ஏரிக்கரை தெருவை சேர்ந்தவர் சரவணன்,24.இவர் மீது சேலையூர் காவல் நிலையத்தில் ஏற்கனவே வழக்குகள் உள்ளன.

இவர், கடந்த 2025, அக்., மாதம், தனக்கு பெற்றோர்



இல்லை,அநாதைஎனக்கூறி,செங்குன்றம்,அம்பேத்கர் நகரில், 'டூ வீலர்' பழுது பார்க்கும் கடை நடத்தி வரும் அஸ்லாம்,38,என்பவரிடம்வேலைக்குசேர்ந்துள்ளார்.

இந்நிலையில், கடந்த 16ம் தேதி, மாட்டுப் பொங்கல் அன்று, அஸ்லாம் வெளியே சென்றிருந்த நிலையில், கடையின் கல்லா பெட்டியிலிருந்து, 60,000 ரூபாயை திருடிய சரவணன், அங்கிருந்து தலைமறைவானார்.

அதிர்ச்சியடைந்த அஸ்லாம், சரவணனை பிடிக்க, ஒரு பெண்ணின் உதவியை நாடி உள்ளார். அந்த பெண், 'இன்ஸ்டாகிராம்' வாயிலாக, சரவணனை தொடர்பு கொண்டு, காதலிப்பதாக கூறி உள்ளார்.

பின், நேற்று முன்தினம், அந்த பெண், இன்ஸ்டாகிராமில் சரவணனை தொடர்பு கொண்டு, இரவு, 11 மணிக்கு, கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் வந்தால், அங்கிருந்து, படுக்கை வசதி உள்ள பேருந்து வாயிலாக வெளியூர் சென்று திரும்பலாம் என, கூறி உள்ளார்.இதை நம்பிய சரவணன், கிளாம்பாக்கம் வந்து, அந்த பெண்ணை தொடர்பு கொண்டபோது, அவர்,வண்டலூர் உயிரியல் பூங்கா சந்திப்பில்,பவானி திருமண மண்டபம் அருகே நிற்பதாக கூறி உள்ளார்.

மண்டபம் அருகே சரவணன் வந்தபோது, அங்கே மாருதி பொலினோ காரில், செங்குன்றத்தை சேர்ந்த தன் நண்பர்கள் யோகேஷ், 29, விஜயகுமார், 31, ரஞ்சித் குமார், 23, மஸ்தான், 19, நந்தகுமார், 22, மோகன், 19, ஆகிய ஆறு பேருடன் தயார் நிலையிலிருந்த அஸ்லாம், சரவணனை அடித்து, காரில் ஏற்றி உள்ளார்.

இந்த சம்பவத்தை நேரில் பார்த்த சித்தாலப்பாக்கத்தை சேர்ந்த கால் டாக்சி ஓட்டுனர் மோகன் குமார், 29, என்பவர், காவல் கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் தெரிவித்தார்.

சம்பவம் குறித்து, ஓட்டேரி போலீசாருக்கு தகவல் பரிமாறப்பட்ட நிலையில், இன்ஸ்பெக்டர் வானமாமலை, எஸ்.ஐ., வெற்றி செல்வன் மற்றும் நான்கு போலீசார், மாருதி பொலினோ காரை காவல் கட்டுப்பாட்டு அறை உதவியுடன், மற்றொரு காரில் பின் தொடர்ந்தனர்.

பின், நேற்று அதிகாலை 2:00 மணி அளவில், புழல் – செங்குன்றம் சாலையில், நாகாத்தம்மன் கோவில் அருகே, காரை மடக்கி, சரவணனை மீட்டு, அஸ்லாம் மற்றும் அவரது நண்பர்கள் ஆறு பேரையும் கைது செய்தனர்.

பின், ஓட்டேரி காவல் நிலையம் அழைத்து வந்து, வழக்கு பதிவு செய்து, நேற்று மாலை செங்கல்பட்டு நீதிமன்றத்தில், அனைவரையும் ஆஜர் படுத்தி, சிறையில் அடைத்தனர்.



இந்திய விடுதலைப் போராட்ட வீரர் நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் 129 வது பிறந்த நாளை முன்னிட்டு மதுரை ஜான்சிராணி பூங்காவில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு தமிழ் தேசிய பார்வர்ட் பிளாக் கட்சி சார்பாக மாநில பொருளாளர் மாநில அமைப்பு செயலாளர் ஆர்கே ஆனந்தன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் மாநில தொண்டரணி தலைவர் விக்னேஷ், மாநில வழக்கறிஞர் தலைவர் தர்மர்,மாவட்ட இளைஞரணி அன்பு, மதுரை மாநகர் மாவட்ட இளைஞர் பொதுச் செயலாளர் பிரதீப், மதுரை மாவட்ட இ தலைவர் விக்னேஸ்வரன், கிழக்கு மாவட்ட செயலாளர் சுரேஷ் உட்பட நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்

## சாலைபாதுகாப்பு மாதத்தையொட்டி சாலை விபத்துக்களை தவிர்க்கும் வகையில்

## கடலூர் மாவட்டம், விருத்தாசலத்தில் ஹெல்மெட் விழிப்புணர்வு பேரணி



வருவாய் வட்டாட்சியர் அலுவலகம் எதிரில் இருந்து துவங்கிய இப்பேரணி வட்டார போக்குவரத்து செல்வம் அலுவலர் தலைமையில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக கலந்த கொண்டு விருத்தாசலம் கோட்டாட்சியர் விஷ்ணு ப்பிரியா. விருத்தாசலம் காவல் துணை கண்காணிப்பாளர்

பாலகிருஷ்ணன் ஆகியோர் கொடியசைத்து துவக்கி வைத்தனர்.

300க்கும் மேற்பட்டவர்கள் இருசக்கர வாகனத்தில் ஹெல்மெட் அணிந்தபடி கடலூர் சாலை, கடைவிதி, பாலக்கரை, ஜங்ஷன் சாலை ஆகிய நகரத்தின் முக்கிய வீதிகள் வழியாக சென்று, ஒளிப்பெருக்கி மூலம், தலைக்கவசம் அணிவதன் அவசியம் குறித்து, உயிர்க்கவசம் தலைக்கவசம் அணிவீர், உயிர் இழப்பை தவிர்ப்பீர், உரிமம் வாங்க 8 போடு, உயிர் காக்க ஹெல்மெட் போடு, ஹெல்மெட் அணிவது பாதுகாப்பு இதுவே உனது பாதுகாப்பு உள்ளிட்ட 34 வாசகங்கள் அடங்கிய துண்டு பிரசுரத்தை பொதுமக்களிடம் வழங்கினர்.

இந்த விழிப்புணர்வு பேரணியில், வட்டார மோட்டார் வாகன ஆய்வாளர் பெரியசாமி, போக்குவரத்து காவல் ஆய்வாளர் கோவிந்தன், விருத்தாச்சலம் காவல் ஆய்வாளர் பிரதீப் சந்திரன், அனைத்து மகளிர் காவல் ஆய்வாளர் கவிதா, காவல் உதவி ஆய்வாளர் காந்தி போக்குவரத்து காவல் செல்வநாயகம், ராமஜெயம், உதவி ஆய்வாளர்கள் மற்றும் டூவீலர் மெக்கானிக் உரிமையாளர்கள் ஓட்டுநர் பயிற்சி பள்ளி ஊழியர்கள், இருசக்கர வாகன விற்பனை முகவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்கள்

## காங்கிரஸ் கட்சி அலுவலகத்தில் புதிய மாவட்டத் தலைவர்கள் பொறுப்பேற்பு; கவுன்சிலர் ஞானதீபம் வாழ்த்து



ஈரோடு மாவட்ட காங்கிரஸ் கட்சியின் தலைமை அலுவலகமான ஜவஹர் இல்லத்தில்,புதிய மாவட்டத் தலைவர்கள் பதவியேற்கும் விழா சிறப்பாக நடைபெற்றது. இதில் கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் உற்சாகத்துடன் கலந்து கொண்டனர்.

இந்த விழாவில் ஈரோடு மாவட்டத்தின் பல்வேறு பிரிவுகளுக்குபுதியதலைவர்கள் முறைப்படிதங்களது பொறுப்புகளை ஏற்றுக்கொண்டனர்:

பா.ராஜேஷ் ராஜப்பா – ஈரோடு மாநகர் மாவட்டத் தலைவர்,

கே.பி.முத்துக்குமார் – ஈரோடு தெற்கு மாவட்டத் தலைவர்

கள்ளிப்பட்டி பா.உதயகுமார் – ஈரோடு வடக்கு மாவட்டத் தலைவர்

புதிதாகப் பொறுப்பேற்றுக்கொண்ட மூன்று மாவட்டத் தலைவர்களையும், காங்கிரஸ் கட்சியின் தமிழ்நாடு மாநில பொதுக்குழு உறுப்பினரும், நசியனூர் பேரூராட்சி கவுன்சிலருமான ஞானதீபம் நேரில் சந்தித்தார். அவர்களுக்குச் சால்வை அணிவித்து,இனிப்புகளை வழங்கி தனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வின் போது காங்கிரஸ் கட்சியின் முக்கிய நிர்வாகிகள் மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் உடனிருந்தனர். புதிய தலைவர்களின் வருகை மாவட்டத்தில் கட்சிப் பணிகளை மேலும் வலுப்படுத்தும் எனத் தொண்டர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

## வேப்பூர் அருகே மகளிர் குழு கடன் தொகையில் லட்சக்கணக்கில் மோசடி

## நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் ஆர்ப்பாட்டம்

கடலூர் மாவட்டம் வேப்பூர் அருகே நிராமணி கிராமத்தில் மகளிர் சுய உதவிக்குழு கடன் தொகையில் பல லட்ச ரூபாய் மோசடி செய்யப்பட்டதைக் கண்டித்து, நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இக்கிராமத்தில் வறுமை ஒழிப்பு சங்கத்தின் கீழ் செயல்படும் பத்துக்கும் மேற்பட்ட குழுக்களுக்கு, தலா 1 லட்சத்து 6 ஆயிரம் ரூபாய் வங்கி கடன் அனுமதிக்கப்பட்ட நிலையில்,குழு உறுப்பினர்களுக்கு வெறும் 70 ஆயிரம் ரூபாய் மட்டுமே வழங்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

குழுக்களின் கணக்காளர் மற்றும் வறுமை ஒழிப்பு சங்க அலுவலர்கள் ஒன்றிணைந்து, உறுப்பினர்களுக்குத் தெரியாமல் எஞ்சிய தொகையை முறைகேடு செய்துள்ளதாகப் பாதிக்கப்பட்ட பெண்கள் குற்றம் சாட்டுகின்றனர். வங்கி நிர்வாகம் முழுத் தொகைக்கா வட்டியைச் செலுத்துமாறு அறிவுறுத்தியபோதுதான் தாங்கள் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த பெண்கள், இந்த நிதி மோசடியில் ஈடுபட்டவர்கள் மீது வழக்குப் பதிவு செய்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தினர்.

மேலும், மகளிர் குழுக்களைக் கண்காணிக்க வேண்டிய ஊராட்சி ஒன்றிய மற்றும் மாவட்ட நிர்வாகத்தின் அலட்சியமே இத்தகைய பெரிய அளவிலான மோசடிக்குக் காரணம் என அவர்கள் புகார் தெரிவித்துள்ளனர். இந்த முறைகேடு தொடர்பாக உரிய விசாரணை நடத்தி இழந்த பணத்தைப் பெற்றுத்தர வேண்டும் என்பதே போராட்டக் குழுவினரின் கோரிக்கையாக உள்ளது.



## மதுரையில் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் சிலைக்கு

### ஸ்ரீ மாதவ் சதாசிவராவ் கோல்வால்கர் மடத்தின் மடாதிபதி மற்றும் திருவண்ணாமலை ஆதினம் ஸ்ரீ ஸ்ரீ கருணாநிதி சுவாமிகள் மாலை அணிவித்து மரியாதை



இந்திய விடுதலைப் போராட்ட வீரர் நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் 129-வது பிறந்தநாளை முன்னிட்டு, மதுரை ஜான்சி ராணி பூங்காவில் உள்ள, அவரது திருவுருவச் சிலைக்கு ஸ்ரீ மாதவ் சதாசிவராவ் கோல்வால்கர் மடத்தின் மடாதிபதி மற்றும்திருவண்ணாமலை ஆதினம் ஸ்ரீ ஸ்ரீ கருணாநிதி சுவாமிகள் மாலை அணிவித்துமரியாதைசெலுத்தினார்.

இதில் முக்குலத்தோர் வாழ்வுரிமைக் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் பூவை ஜெயக்குமார், நிர்வாகி சிங்கம் ரமேஷ், மனிதநேய ஃபார்வர்டு பிளாக் மாநிலதலைவர் வழக்கறிஞர் அஜித் குமார், மற்றும் சுதந்திரப் புலிகள் கட்சிதலைவர் தத்தனேரி கார்த்திக் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.



மதுராந்தகம் வருகை புரிந்த பாரத பிரதமர் மோடியை சித்தர் பீடத்தின் சார்பாக ஆன்மீக புரட்சி தலைவர் சக்தி.திரு. கோ.ப.அன்பழகன் அவர்கள் நேரில் சந்தித்தார்.



3 வழித்தடங்களில் அம்ரித் பாரத் எக்ஸ்பிரஸ் ரயில் சேவையை திருவனந்தபுரத்தில் நடந்த விழாவில் பிரதமர் நரே ந்திர மோடி அவர்கள் கொடி அசைத்து துவக்கி வைத்தார் நாகர்கோவில் மங்களூரு திருவனந்தபுரம் தாம்பரம் திருவனந்தபுரம் சார்லப்பள்ளி ஆகிய 3 வழித்தடங்களில் அம்ரித் பாரத் எக்ஸ்பிரஸ் ரயில் சேவையை திருவனந்தபுரத்தில் நடந்த விழாவில் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் கொடி அசைத்து துவக்கி வைத்தார்.

# காசுக்காகவும் சீட்டுக்காகவும் தான் கூட்டணி, பேரம்கள் நாம் தமிழர் கட்சி தனித்தே போட்டியிடும் தாம்பரத்தில் சீமான் பேட்டி

நாம் தமிழர் கட்சியின் கலந்தாய்வு கூட்டம் தாம்பரம் அடுத்த சேலையில் பகுதியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது இதில் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கலந்து கொண்டார்.

தமிழகம் முழுவதிலும் இருந்து கொள்கை பரப்புச் செயலாளர்கள் மற்றும் சமூக ஊடக தொழில்நுட்ப பிரிவு உறுப்பினர்கள் கலந்து கொண்டுள்ளனர்..

இதில் தேர்தலில் பொதுமக்களிடம் தங்கள் கொள்கை மற்றும் கோட்பாடுகளை எப்படி சேர்க்க வேண்டும் பிற கட்சிகளின் குறைபாடுகளை சமூக வலைதளங்கள் மூலம் எப்படி எடுத்துரைக்க வேண்டும் என உறுப்பினர்களிடையே கலந்துரையாட உள்ளார்

நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வந்த சீமான் செய்தியாளர்களை சந்தித்தார்

ஆட்சி மாற்றம் ஏற்படும் என மதுராந்தகத்தில் நடைபெற்ற மின்சாரத்தில் பாடி பழனிச்சாமி பேசியது குறித்து கேட்ட பொழுது

ஆட்சி மாற்றம் என்றால் என்ன என்ன மாற்றம் நிகழப் போகிறது கொலை கொள்ளை கற்பழிப்பு லஞ்சம் ஊழல் இல்லாமல் இருக்குமா மண் அள்ளுவது தடுக்கப்படுமா மதுபான கடைகள் மூடப்படுமா திமுக விற்கும் அதிமுக விற்கும் என்ன வேறுபாடு காங்கிரஸ் இருக்கும் பாஜகவிற்கும் என்ன வேறுபாடு என அடுக்கடுக்கான கேள்விகளை முன் வைத்தார்

ஆளை மாற்றி மாற்றி உட்கார வைப்பார்கள் போன முறை எடப்பாடி இந்த முறை ஸ்டாலின் அடுத்த முறை மாற்றம் என்றால் யாரை உட்கார வைப்பீர்கள் ஆட்சி மாற்றம் என்பது ஆட்சி முறையில் மாற்றம் ஏற்படுமா

மழை வெள்ளத்தில் சிக்கி அவர்களுக்கு நிவாரணம் கொடுப்பது ஆட்சி அல்ல மழை நீரில் சிக்கி தவிக்காமல் மக்களை காப்பாற்றுவது தான் ஆட்சி

ஒரே கொள்கையில் இருக்கும் கட்சியினர் போட்டி போட்டுக் கொள்கிறார்கள் என் கொள்கைக்கு யாரும் இந்தியாவிலேயே உலகத்திலையோ தமிழ்நாட்டிலேயே போட்டிக்கு



ஆள் இல்லை

என்னுடைய ஒத்த கருத்துடைய கட்சிகள் ஏதும் இல்லாததால் தனித்து போட்டியிடுகிறேன்

பிஜேபி வந்துவிடும் என கூறுகிறார்கள் பிஜேபியை அழைத்து வந்தது யார் பாஜக தனது கட்சியில் 90% இந்துக்கள் இருக்கிறார்கள் என கூறுகிறது திமுக தனது கட்சியை 80% இருக்கிறார்கள் என கூறுகிறது அப்படி என்றால் பாஜகவின் பி டீம் யார்

திமுகவில் இருக்கும் முதன்மையான அமைச்சர்கள் அனைவரும் இதற்கு முன்பு எங்கிருந்தார்கள் அதிமுகவில் இருந்து வந்தவர்கள் தான் அதன் பிறகு எப்படி மாற்றம் ஏற்படும்

கூட்டணியில் மாற்றம் என்பது காசுக்காகவும் சீட்டுக்காகவும் நடக்கிறது கூட்டத்தில் நிற்பதற்கு வீரமும் துணிவும் தேவையில்லை...

தமிழன் என்றால் யார் யார் என கேட்கிறார்கள் திராவிடன் என்றால் யார் எனக் கேட்டால் பதில் சொல்வதில்லை

ஏற்கனவே கட்டமைக்கப்பட்ட நாம் தமிழருக்கு நான் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருக்கிறேன் எனது அடுத்த தலைமுறைகள் அதன் பலனை அடைவார்கள்

திமுகவின் ஆட்சியை தூக்கிஎறிவதுதான் மற்ற கட்சிகளின் கொள்கையா மக்களின் நலன் சார்ந்து ஆட்சியை கொடுக்க வேண்டும்

பாஜக உள்ளே வந்துவிடும் என்பது அடிப்படை அறிவற்ற பேச்சு நான் வரவிடமாட்டேன் என கூறும் அளவிற்கு தைரியம் யாருக்கும் இல்லை மற்றொரு கட்சியுடன் சேர்ந்து போட்டியிட்டால் தான் வெற்றி பெற முடியும் என்றால் தனி கட்சி எதற்கு தனி கோட்பாடுகள் எதற்கு

என்ன பேட்டி அளித்த அவர் தொடர்ந்து ஆய்வு கூட்டத்தில் கடந்து கலந்து கொண்டார்.

# ஈரோட்டில் வங்கி ஊழியர்கள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்



ஈரோடு மாநகர் காளைமாடு சிலை அருகில் அகில இந்திய ஓவர்சீஸ் வங்கி ஊழியர்கள் சங்கம் சார்பில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி (23.1.2026 ) அன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டத்திற்கு தலைவர் நந்தகுமார் தலைமையில் ஈரோடு மண்டலத்தை சேர்ந்த வங்கி ஊழியர்கள் பெருமளவில் கலந்து கொண்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் காலியாக உள்ள எழுத்தர் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும் எனவும், பணியின் போது உயிரிழந்த ஊழியர்களின் குடும்பத்திற்கு கருணை அடிப்படையிலான நியமனங்களை உடனடியாக வழங்க வேண்டும் எனவும், மேலும் கியூ.ஆர்.கோடு அடிப்படையிலான தனிநபர் கருத்து பெறும் முறையை உடனடியாக திரும்ப பெற வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.இந்த ஆர்ப்பாட்டம் தொடர்பாக வங்கி ஊழியர்கள் தெரிவிக்கையில், மேற்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி வருகிற பிப்ரவரி 2 மற்றும் 3- ஆம் தேதிகளில் நாடு முழுவதும் வேலைநிறுத்தபோராட்டம் நடைபெறும் என்றனர்.

# கோவை ஆவாரம்பாளையம் பகுதியில் உள்ள, ஸ்ரீ ராமகிருஷ்ணா மகளிர் கல்லூரி சார்பில் தேசிய பெண் குழந்தைகள் தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது

தேசிய பெண் குழந்தைகள் தினத்தை முன்னிட்டு கோவை ஆவாரம்பாளையம் பகுதியில் உள்ள ஸ்ரீராமகிருஷ்ணா மகளிர் கலை அறிவியல் கல்லூரியின் மகளிர் மேம்பாட்டு அமைப்பு, தேசிய மாணவர் படை மற்றும் நாட்டு நலப்பணித்திட்ட அமைப்புகளின் சார்பில் பேரணி நடைபெற்றது.

எஸ்.என்.ஆர் சன்ஸ் அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் முனைவர் சுந்தர் ராமகிருஷ்ணன் மற்றும் கல்லூரியின் முதல்வர் முனைவர் கி.சித்ரா ஆகியோர் தொடங்கி தொடங்கி வைத்தனர்.

மேலும் இதுகுறித்து கல்லூரியின் முதல்வர் முனைவர் கி.சித்ரா செய்தியாளர்களிடம் கூறியதாவது..

ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 24ம் தேதி தேசிய பெண் குழந்தைகள் தினம் கொண்டாடப்படுகிறது. பெண் கல்விக்காண ஒரு பிரத்தியேக கல்லூரியாக உள்ள எங்கள் கல்லூரி சார்பில் இதை முன்னிட்டு இன்றையதினம் பெண் குழந்தைகளுக்கான சம உரிமைகள், கல்வி வாய்ப்புகளை உறுதிப்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்திய பதாகைகளை ஏந்தி எங்கள் மாணவிகள் கோஷமிட்-



டபடி மாணவிகள் ஊர்வலமாகச் சென்றனர்.

என்.எஸ்.எஸ் மற்றும் என்.சி.சி தன்னார்வலர்கள் உட்பட 150 மாணவிகள் இந்தவிழிப்புணர்வுப் பேரணியில் பங்கேற்றனர். பெண்களுக்கு அதிகாரமளித்தல் குறித்த செய்திகள் அடங்கிய பதாகைகளையும் போஸ்டர்களையும் ஏந்தி, கல்லூரி வளாகத்திலிருந்து மகளிர் பாலிடெக்னிக் கல்லூரி வரை முழக்கங்களை எழுப்பியதாக கூறினார் என்பது குறிப்பிடத்தக்கது.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (24.01.2026) ஈரோடு மாநகராட்சி, காசிபாளையம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு திட்ட மருத்துவ முகாமினை பார்வையிட்டு, கர்ப்பிணித்தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தினை வழங்கினார். உடன் ஈரோடு மாநகராட்சி மேயர் சு.நாகரத்தினம் சுப்பிரமணியம் உட்பட பலர் உள்ளனர்.

# காட்டுமன்னார்கோவில் தாலுக்கா அலுவலகத்தில் எஸ்.ஐ.ஆர். வாக்காளர்பட்டியல் தீவிரப்பணி – இரவு பகலின்றி பணியில் ஈடுபடும் அதிகாரிகள்

கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோவில் தாலுக்கா அலுவலகத்தில், பொதுமக்களிடமிருந்து பெறப்படும் எஸ்.ஐ.ஆர் படிவங்களை ஆன்லைனில் பதிவேற்றும் பணிகள் அரசு விடுமுறை நாட்களிலும் கூட இடையறாது நடைபெற்று வருகின்றன.

பிப்ரவரி 17ஆம் தேதி இறுதி வாக்காளர் பட்டியல் வெளியீட்டை

முன்னிட்டு,எஸ்.ஐ.ஆர் படிவம் மூலம் பெயர் சேர்த்தல், நீக்குதல் மற்றும் திருத்தப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

ஜனவரி 30 வரை அவகாசம் வழங்கப்பட்டுள்ளதால், சிறப்பு முகாம்கள் மற்றும் இ-சேவை மையங்களில் பொதுமக்கள் அதிகளவில் விண்ணப்பித்து வருகின்றனர். வட்டாசியர் பிரகாஷ் தலைமையில் அதிகாரிகள் இரவு பகலின்றி பணியாற்றி, ஒவ்வொரு விண்ணப்பமும் துல்லியமாக பதிவாகும் வகையில் கவனம்செலுத்தி வருகின்றனர். மேலும், இந்த பணிகளை தேர்தல் பணி அலுவலர் ராணி நேரடியாகஆய்வுசெய்து,பணிகள் முறையாக நடைபெ-



றுகிறதா என கண்காணித்து வருகிறார்.

இறுதி வாக்காளர் பட்டியல் வெளியீட்டை முன்னிட்டு, வாக்காளர்கள் தங்களின் பெயர், முகவரி உள்ளிட்ட விவரங்களில் திருத்தம் தேவைப்பட்டால் உடனடியாக எஸ்.ஐ.ஆர் படிவம் மூலம் விண்ணப்பிக்குமாறு அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.



பரத் கராத்தே அகாடமி சார்பாக கோவை சூலூர் பகுதியில், கராத்தே பயிற்சி முகாம் இரு நாட்கள் நடைபெற்றது. இதற்காற ஏற்பாடுகளை பரத் அகாடமியின் சீப் எகஸ்கியூட்டிவ் அதிகாரி, மற்றும் கராத்தே இந்தியா அமைப்பின் சேர்மன் சாய் ப்ரூஸ் செய்திருந்தார். இதனை தலைமை தாங்கி துவக்கி வைக்க, உலக கராத்தே சம்மேளனத்தின் முக்கிய பொருப்பாளரும், அகில இந்திய கராத்தே சங்க தலைவரும், தெற்கு ஆசிய தலைவருமான பரத் ஷர்மா, சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு முகாமினை துவக்கி வைத்தார்.

# ஜவஹர் இல்லத்தில் சங்கமம்: ஈரோடு மாநகர் காங்கிரஸ் புதிய தலைவருக்கு INTUC சார்பில் எழுச்சிமிகு பாராட்டுக்கள்

ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டியின் புதிய தலைவராகப் பொறுப்பேற்றுள்ள திரு. பா. ராஜேஷ்ராஜப்பாஅவர்களுக்கு, ஈரோடு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி அலுவலகமான ஜவஹர் இல்லத்தில் நேற்று உற்சாகமான பாராட்டு விழா நடைபெற்றது.

INTUC சார்பில் பொன்னாடை கௌரவம்:

தொழிலாளர் சங்கமான INTUC நிர்வாகிகள் மற்றும் கட்சியின் முன்னால் தலைவர்கள் ஒன்றிணைந்து, புதிய தலைவருக்கு பொன்னாடை போர்த்தி வாழ்த்துகளைத் தெரிவித்தனர். இந்த நிகழ்வு கட்சித் தொண்டர்களிடையே பெரும் எழுச்சியை ஏற்படுத்தியது.

பங்கேற்ற முக்கிய நிர்வாகிகள்:

இந்த எழுச்சிமிகு நிகழ்வில் INTUC நிர்வாகிகள் எஸ். நரசிம்மன், வி.எம். லோகநாதன், வி. திருப்பதி ரெட்டி மற்றும் சென்னிமலை மேற்கு வட்டார காங்கிரஸ் தலைவர் எம்.ஏ. ஜெகதீசன்,பவானி இக்பால் பாஷா, INTUC மாநில பொருளாளர் என். துரைசாமி, ஆர். பாபு ஆகியோர் வாழ்த்தினார்கள்.

முன்னாள் தலைவர்கள் மற்றும் அணி நிர்வாகிகள்:

முன்னாள் மாவட்டத் தலைவர்கள் டி. திருச்செல்வம், ஈ.ஆர். ராஜேந்திரன், துணைத் தலைவர் கே.எஸ்.செல்வம், மண்டல தலைவர் (மாமரத்துப்பாளையம்) எஸ். கோபி,ஈரோடு



மாவட்ட காங்கிரஸ் ஊடகப் பிரிவு தலைவர்.ம.முகமது அர்சத்,நெசவாளர் அணி மாவட்ட தலைவர் சி. மாரிமுத்து, ஈரோடு மாவட்ட காங்கிரஸ் சிறுபான்மை துறை துணைத் தலைவர் கே.என். பாஷா, ஈரோடு பாராளுமன்ற மகிளா காங்கிரஸ் ஒருங்கிணைப்பாளர் ஆர். கிருஷ்ணவேணி, மற்றும் செல்வி, மாவட்ட நிர்வாகிகளான பெரியார் நகர் சூரஜ், வாட்டர் சிவாஜி கணேசன், சுகந், மகேஷ் உள்ளிட்ட திரளானோர் கலந்து கொண்டனர். புதிய தலைமையின் கீழ் ஈரோடு மாநகர் காங்கிரஸ் இயக்கம் புதிய பரிமாணத்தை எட்டும் என நிர்வாகிகள் நம்பிக்கையுடன் தெரிவித்தனர்.

# விபத்தில்லா ஈரோட்டை உருவாக்க போக்குவரத்து காவல்துறை சார்பாக விழிப்புணர்வு பேரணி

## ஈரோடு டவுன் டிஎஸ்பி கொடியசைத்து துவக்கி வைத்தார்




ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அ.சுஜாதா அவர்களின் ஆணைக்கிணங்க போக்குவரத்து காவல்துறையினர் மேற்கொண்டு வரும் அதிரடி நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, சாலை பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு ஈரோடு வடக்கு மற்றும் தெற்கு போக்குவரத்து காவல் நிலையம் சார்பாக விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. ஈரோடு டவுன் டிஎஸ்பி முத்துக்குமரன் தலைமையில் கொடியசைத்து வைத்த இந்த பேரணிக்கு போக்குவரத்து காவல் நிலைய ஆய்வாளர்கள் ராமகிருஷ்ணன், ரமேஷ் ஆகியோர் முன்னிலையில் ஈரோடு பேருந்து நிலையம் அருகிலுள்ள தனியார் திருமண மண்டபத்தில் இருந்து ஸ்வஸ்திக் கார்னர், மேட்டூர் சாலை வழியாக அரசு மருத்துவமனை ரவுண்டானா மேம்பாலம் வரை முடிவடைந்தது. நடைபெற்ற இந்த விழிப்புணர்வு பேரணியில் நான்கு சக்கர மற்றும் இருசக்கர வாகன ஓட்டிகளுக்கு போக்குவரத்து விதிகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து சாலையில் செல்லும் வாகன ஓட்டிகளுக்கு விழிப்புணர்வு பதாகைகளை வழங்கினர்.

அப்போது, மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டக்கூடாது, கட்டாயம் ஹெல்மெட் அணிய வேண்டும், வாகனம் ஓட்டும்போது செல்போன் பேசுவதைத் தவிர்க்க வேண்டும், இருசக்கர வாகனத்தில் இருவருக்கு மேல் பயணம் செய்யக்கூடாது மற்றும் அதிவேகமாகச் செல்வதைத் தவிர்க்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. மேலும், சிறுவர் சிறுமியர்களை வாகனம் ஓட்ட அனுமதிக்கக் கூடாது, உரிமம் மற்றும் உரிய ஆவணங்கள் இன்றி வாகனம் ஓட்டக்கூடாது, பேருந்து படிக்கட்டுகளில்பயணம் செய்யக்கூடாது, ஆட்டோக்களில் அதிக நபர்களை ஏற்றிச் செல்லக்கூடாது என அறிவுறுத்தப்பட்டது. சாலையைக் கடக்கும்போது செல்போன் பேசுவதைத் தவிர்க்கவும், நடந்துசெல்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கவும் கேட்டுக்கொண்ட போலீசார், போக்குவரத்து விதிகள் மற்றும் சிக்னல்களை முறையாக மதித்து, போலீசாருக்கு முழு ஒத்துழைப்பு வழங்கி விபத்தில்லா ஈரோட்டை உருவாக்கிட உறுதியேற்க வேண்டும் என வாகன ஓட்டிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர். "குடும்பம் வாழ கவனமுடன் வாகனம் ஓட்டுவோம், விபத்தில்லா ஈரோட்டை உருவாக்குவோம்" என்ற முழக்கத்துடன் இந்த விழிப்புணர்வு பேரணி நிகழ்வு நிறைவு பெற்றது.

ஈரோடு மாவட்டத்தில் கலெக்டர் கந்தசாமி காசிபாளையம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற

# நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு திட்ட மருத்துவ முகாமினை பார்வையிட்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்





ஈரோடு மாவட்டம், காசிபாளையம், அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் நேற்று (24.01.2026) மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு திட்ட மருத்துவ முகாமினை பார்வையிட்டு, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் நலம் காக்கும்ஸ்டாலின்சிறப்பு திட்ட மருத்துவ முகாம் 02.08.2025 அன்று துவக்கி வைக்கப்பட்டது. தமிழ்நாடு முழுவதும் இத்திட்டத்தினால் எண்ணற்ற பயனாளிகள் பயன்பெற்று வருகின்றனர். அதன்படி, ஈரோடு மாவட்டத்தில் 35 மற்றும் 36-வது மருத்துவ முகாம் நேற்று 24.01.2026 காசிபாளையம், அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் பவானிசாகர், தசாரி பாளையம், சிதம்பரம் செட்டியார் உயர்நிலைப் பள்ளியிலும் நடைபெற்றது. இம்மருத்துவ முகாம்களில் 34 சிறப்பு மருத்துவர்கள் மற்றும் 20 மருத்துவர்கள் என மொத்தம் 54 மருத்துவர்கள் கலந்து கொண்டு சிகிச்சை அளித்தார்கள். இம்முகாம்களில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் கண் பரிசோதனை, பல் சிகிச்சை, ரத்தப்பரிசோதனை, ECG, X-RAY பரிசோதனைகளும் கூடுதலாக பெண்களுக்கு கர்ப்பப்பைவாய் புற்றுநோய், மார்பக புற்றுநோய் பரிசோதனைகளும் செய்யப்பட்டது. மருத்துவர்கள் பரிசோதனை செய்து தேவையான மருந்து மாத்திரைகள் வழங்கி, மேல் சிகிச்சை தேவைப்படுவோருக்கு சிறப்பு மருத்துவர்களை கொண்டு பரிசோதனை செய்து ECHO போன்ற உயர் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டு. உயர் சிகிச்சை தேவைப்படுவோர் பரிந்துரை செய்யப்பட்டார்கள்.

இதுவரை 34 மருத்துவ முகாம்கள் நடைபெற்றுள்ளது. இந்த முகாம்களில் 46,379 பயனாளிகளுக்கு மருத்துவ பரிசோதனை மற்றும் உயர் சிறப்பு சிகிச்சை வழங்கப்பட்டது. 26,200 நபர்களுக்கு ECG-ம், 30,919 நபர்களுக்கு ஆய்வக பரிசோதனையும் 3,075 நபர்களுக்கு X-RAYம், 2,889 நபர்களுக்கு Scan-ம், 3,452 நபர்களுக்கு ECHO-ம் வழங்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ச.கந்தசாமி இஆப., அவர்கள் காசிபாளையம், அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமினை நேரில் பார்வையிட்டு 10 கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களும், 10 நபர்களுக்கு மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் மருந்துப் பெட்டகங்களும், 5 நபர்களுக்கு சஞ்சீவி பெட்டகமும். 7 பயனாளிகளுக்கு மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டைகள் என மொத்தம் 32 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இம்முகாமில், மாண்புமிகு ஈரோடு மாநகராட்சி மேயர் சு. நாகரத்தினம் சுப்பிரமணியம், மாவட்ட சுகாதார அலுவலர் அருணா, மாநகர நகர் நல அலுவலர் மரு. கார்த்திகேயன், மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (24.01.2026) ஈரோடு கலைமகள் கல்வி நிலையத்தில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில், நடைபெற்ற மனிதநேய வாரவிழாவினைதுவக்கி வைத்து, கலைநிகழ்ச்சியில் பங்கேற்ற மாணவ, மாணவியர்களுக்கு புத்தகங்களை வழங்கி வாழ்த்துக்களைத் தெரிவித்தார். உடன் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் கு.மகேஸ்வரி உட்பட பலர் உள்ளனர்.



16 வது தேசிய வாக்காளர் தினமான 25.01.2026 யை முன்னிட்டு, ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி (24.01.2026) நேற்று ஈரோடு சிக்கய்ய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் மாற்றுத்திறனாளி வாக்காளருக்கு சால்வை அணிவித்து மரியாதை செலுத்தினார்.உடன் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) தேன்மொழி, ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா உட்பட பலர் உள்ளனர்.



16 வது தேசிய வாக்காளர் தினமான 25.01.2026 யை முன்னிட்டு, ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி (24.01.2026) நேற்று ஈரோடு சிக்கய்ய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு சான்றிதழ் மற்றும் புத்தகம் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) தேன்மொழி, ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி (24.01.2026) நேற்று ஈரோடு கலைமகள் கல்வி நிலையத்தில், ஆதிதிராவிடர்மற்றும்பழங்குடியினர்நலத்துறையின்சார்பில்,நடைபெற்றமனிதநேயவாரவிழாவில்அமைக்கப்பட்டிருந்த துறைசார்ந்தசாதனைவிளக்கபுகைப்படக்கண்காட்சியினைபார்வையிட்டார்.உடன்ஆதிதிராவிடர்மற்றும்பழங்குடியினர் நல அலுவலர் கு.மகேஸ்வரி உட்பட பலர் உள்ளனர்.

# அமெரிக்காவை தாக்கப்போகும் கடும் பனிப்புயல்: பல மாகாணங்களில் அவசரநிலை!



வாஷிங்டன்: உயிருக்கு ஆபத்தைஏற்படுத்தக்கூடிய கடும் குளிர் அமெரிக்காவைதாக்கஇருப்பதாக வானிலை ஆய்வு நிறுவனங்கள் எச்சரிக்கை விடுத்திருப்பதை அடுத்து,அத்தியாவசியப் பொருட்களை மக்கள் அதிக அளவில் வாங்கிக் குவித்து வருகின்றனர்.

அமெரிக்க வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், "அமெரிக்கா முழுவதும் கடும் பனிப்புயல் உருவாகும். இதனால், மழை மற்றும் கடும் பனி இணைந்து உறைபனி மழை கொட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், நீண்ட நேர மின் தடைகள் ஏற்படலாம், அதிக அளவில் மரங்கள் முறிந்து விழலாம், மக்கள் வெளியே வர முடியாத அளவுக்கு போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்படலாம்.

நாட்டின் தென்மேற்கு மற்றும் மத்திய பகுதிகளைத் தாக்கும் பனிப்புயல், நியூ மெக்ஸிகோவில் இருந்து கிழக்கு கடற்கரை வரை வீசும். மத்திய அட்லாண்டிக் மற்றும் வடகிழக்கு மாகாணங்களை இது தாக்கும்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வானிலை ஆய்வு நிறுவனத்தின் அறிவிப்பை அடுத்து, டெக்ஸாஸ் உட்பட பல்வேறு மாகாணங்களில் 2,700-க்கும் மேற்பட்ட விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளதாக பிளைட்வேர் ட்ராக்கர் என்ற நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்காவில் ஏற்பட்ட கடும் பனிப்புயல் காரணமாக, மின்கட்டமைப்பு செயலிழந்தது. அப்போது லட்சக்கணக்கான மக்கள் மின்சாரம் இல்லாமல் தவித்தனர். எனினும், அப்படி ஒரு நிலை தற்போது வராது என்றும் தற்போது மின் கட்டமைப்புகள் சிறப்பாக உள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். செய்தியாளர்களிடம் பேசிய குடியரசு கட்சியைச் சேர்ந்த டெக்ஸாஸ் மாகாண ஆளுநர் கிரெக் அபோட், "மின் கட்டமைப்பு முன்பைவிட வலிமையாக உள்ளது. முன்பைவிட அதிகதயார் நிலையில் உள்ளது. குளிர்கால புயலை எதிர்கொள்ளும் முழு திறனைக் கொண்டுள்ளது" என தெரிவித்துள்ளார்.

எனினும், டெக்ஸாஸ் பல்கலைக்கழகப் பொறியியல் பேராசிரியர் மைக்கேல் வெபர், "உறைபனி நாடு முழுவதற்கும் ஒரு பெரிய அபாயமாக உருவெடுக்கும். உதாரணமாகபனி,மரங்களின் மீது குவிந்து மரத்தை முறிக்கும். இதனால், மின்சார கம்பிகள் அறுந்து விழ வாய்ப்புள்ளது. அவ்வாறு நேரும்போது மின்வெட்டு ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது" என்று தெரிவித்துள்ளார்.

பனிப்புயலை முன்னிட்டு பொதுமக்களை எச்சரித்துள்ள ஜனநாயக கட்சியைச் சேர்ந்த நியூயார்க் மாகாண ஆளுநர் கேத்தி ஹோச்சுல், "கடும் குளிர் நிலவும்போது மக்கள் வீட்டுக்குள்ளேயே இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். ஐந்து அல்லது ஆறு நிமிடங்கள் வெளியே வந்தால்கூட அது உங்கள் உடல் நலத்துக்கு ஆபத்தை ஏற்படுத்திவிடும். தண்ணீர் வரும் குழாய்கள், ஹீட்டர்கள் ஆகியவற்றைநன்குபராமரித்தல் முக்கியம். மேலும், அண்டை வீட்டாரையும் கவனித்துக்கொள்ளுங்கள். முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் கவனமாக இருங்கள்" என கேட்டுக்கொண்டுள்ளார்.

நியூயார்க் நகர மேயராக புதிதாக பொறுப்பேற்றுள்ள இந்திய வம்சாவளியைச் சேர்ந்த சோஹ்ரான் மம்தானிக்கு இந்த பனிப்புயல் புதிய சவாலை ஏற்படுத்தி இருக்கிறது. பனி காரணமாக, பல பகுதிகளில் வரும் திங்கள் கிழமை அன்று பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. இன்று (சனிக்கிழமை) நடைபெற இருந்த கூடைப்பந்து போட்டி உள்ளிட்ட பல்வேறு விளையாட்டுப் போட்டிகளும் தேதி மாற்றப்பட்டுள்ளன.

பனிப்புயலுக்குப் பிறகு ஏற்படும் கடுங்குளிர் ஒரு வாரம் வரை நீடிக்கும் என்றும் இது உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் என்றும் அதிகாரிகள் எச்சரித்துள்ளனர். வடக்கு சமவெளிகள் மற்றும் மத்திய மேற்குப் பகுதிகளில் -46.6 டிகிரி செல்சியஸ் அளவுக்கு குளிரின் அளவு தீவிரமாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

குறைந்தது 16 மாகாணங்கள், தலைநகர் வாஷிங்டன் டிசி ஆகியவற்றில் பேரிடர் மீட்புக் குழுக்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. பல நகராட்சிகளில் முகாமகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மக்கள், பல்பொருள் அங்காடிகளில் இருந்து பொருட்களை வாங்கிக் குவித்து வருவதால் பல பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால், பல கடைகளில் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து பொருட்களை வாங்கிச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. (சனிக்கிழமை) முதல் செவ்வாய்கிழமை வரை பனிப்புயலின் தாக்கம் கடுமையாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

Printed by,Hiwins Printers,Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at ERODE, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.